# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2049 ● செப்டம்பர் 1, 2018 | Weekly E-paper ● September 1, 2018




# காலம் தந்த கதாநாயகன்

உள்ளே...




**சாதி ஒழிப்பு ஒன்றே தீர்வு**

இரா.அதியமான்



**நீட்— இறுதித் தீர்வு?**



**கிரேக்கமும் தமிழகமும்**

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2049 ● செப்டம்பர் 1, 2018

Weekly E-paper ● September 1, 2018


# காலம் தந்த கதாநாயகன் நீ!

● சுப.வீரபாண்டியன்



1969 ஆம் ஆண்டு, அறிஞர் அண்ணா அவர்கள் இறந்தபோது, கைபிசைந்து நின்றது காலம். இனி யார் என்று கேட்டது எதிர்காலம்! எல்லாவற்றிற்குமான ஒற்றை விடையாய் உயர்ந்து நின்றார் கலைஞர் அன்று!

இப்போது அந்தக் கலைஞரைக் கழகமும், தமிழகமும் இழந்து நிற்கிறது. இந்தக் கப்பலின் மாலுமி இனி யார் என்று தேட வேண்டிய தேவை இல்லாமல், அனைவரும் ஏற்கும் ஒரே தலைவனாய்த் தளபதி இன்று அப்பொறுப்பை ஏற்றுள்ளார்.

தலைமைப் பொறுப்பை ஏற்றவுடன் அவர் ஆற்றிய உரை, தமிழக வரலாற்றில் நெடுநாள் நின்று பேசும். பகுத்தறிவு, சுயமரியாதை, சமூக நீதி, சமத்துவம் ஆகிய நான்கு தூண்களால் கட்டப்பட்டுள்ள திமுக என்னும் கோட்டையைக் கட்டிக் காப்பேன் என்ற உறுதியோடு தொடங்குகிறது அந்த உரை. இந்தியா முழுவதும் காவிச் சாயம் பூச நினைக்கும் மத்திய அரசுக்குப் பாடம் புகட்டவும், முதுகெலும்பில்லாத மாநில அரசைத் தூக்கி எறியவும் அறைகூவல் விடுக்கிறது தளபதியின் முழக்கம்!

நம் கோட்டையின் அடித்தளம் எது, கொத்த வரும் கழுகின் கூர் நகங்கள் எவை என இரண்டையும் தெள்ளத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டும் அந்த உரை நமக்கெல்லாம் ஒரு நம்பிக்கை விளக்கு!

அறிஞர் அண்ணாவின் காலம் காங்கிரசோடு போராடிய காலம். தலைவர் கலைஞரின் காலமோ, நம்மைப் போலவே கொடி, கட்சியின் பெயர், நம் அறிஞரின் படம் என எல்லாம் வைத்திருந்த போலிகளோடு போராடிய காலம். இதோ இப்போதுதான், ஒளிந்திருக்கும் உண்மை எதிரியின் உருவம் தெரியத் தொடங்கியுள்ளது.

ஆரியதிராவிடப் போரின் அடுத்த கட்டம் தொடங்குகிறது. அழைக்கிறது போர்க்களம்... தலைவர் ஸ்டாலின் பின்னால் அணிவகுக்கட்டும் தமிழகம்! ●

# சாதி ஒழிப்பு ஒன்றே தீர்வு

## ஆதித்தமிழர்பேரவையின் நிறுவனத்தலைவர் இரா.அதியமான் அவர்களோடு ஒரு நேர்காணல்

நேர்காணல்:
மா.உதயகுமார்

### ? பல சமூக முன்னேற்றங்கள் ஏற்பட்ட பின்னரும் கையால் மலம் அள்ளும் அவலம் தொடர்வது பற்றி?

இந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்குத்தான் இந்தப் பணி என்கிற மன நிலை ஆதிக்க சாதிகளுக்கிடையே இருக்கிறது. வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யும் எல்லாப் பட்டதாரிகளுக்கும் ‘Scavengers’ என்கிற தூய்மைப் பணிக்குப் நியமனக் கடிதம் அனுப்பிட முடியாது. அந்தப் பணி நியமன ஆணை இந்த மக்களுக்கு மட்டும் தான் அனுப்பப்படுகிறது. ஒரு பார்ப்பனருக்கோ ஆதிக்க சாதியினருக்கோ பணி நியமனக் கடிதத்தை அனுப்பும் தைரியம் அரசுக்கு இருக்கிறதா? சாதிக் கட்டுமானம் இந்த மன நிலையிலிருந்துதான் தொடங்குகிறது. இத்தொழில் சாதியோடு பின்னிப் பிணைக்கப் பட்டிருக்கிறது. சாதியை ஒழித்தால் தான் இத்தொழிலை ஒழிக்க முடியும். சாதி ஒழிப்பு ஒன்றே தீர்வு.

### ? மற்ற நாடுகளுக்கும் இந்தியாவிற்கும் இருக்கும் வேறுபாடு?

வளர்ந்த நாடுகள் எங்கும் இது போன்ற நிலை இல்லை. விண்வெளிக்குச் செல்லும் உடையைப் போன்ற உடை துப்புரவுப் பணி செய்வோருக்குக் கொடுக்கப்படுகிறது. தீயணைப்புத் துறையிலும், துப்புரவுத் துறையிலும் பணியாற்றுவோருக்கு அதிக சம்பளம் கொடுக்கப்படுகிறது. யார் வேண்டுமானாலும் அந்தப் பணிகளுக்குச் செல்லலாம். இங்கு ஒப்பந்தப் பணியாளர்கள், பகுதி நேரப் பணியாளர்கள் என்று சொல்லி அவர்களுக்குரிய ஊதியத்தைக் கூடக்கொடுப்பதில்லை. ஒரு பஞ்சாயத்தில் வெறும் ரூ. 884 கூலியாகக் கொடுக்கப்படுகிறது.

### ? மறுவாழ்வு ஏற்படுத்த அரசு எடுக்கும் முயற்சிகள் பற்றி...

அக்ரகாரம், ஊர், சேரி என்று பிரித்து வைத்ததைப் போல சேரியிலிருந்தும் இவர்கள் பிரித்து வைக்கப் படுகிறார்கள். அரசும் ஊருக்கு ஒதுக்குப்புறத்தில் தான் இவர்களுக்குக் குடியிருப்புகள் அமைத்துத் தருகிறது.

வேலை ஒழிப்பு(கையால் மலம் அள்ளுதல்), மறு வாழ்வு இரண்டும் சேர்ந்ததுதான் சட்டம். ஆனால் மத்திய அரசு இவ்வேலைகளிலிருந்து இம்மக்கள் சென்றுவிடக் கூடாது என்பதிலேயே குறிக்கோளாக இருக்கிறது. 40,000 ரூபாயைக் கொடுத்து மறுவாழ்வு என்பது ஏமாற்று வேலை. அவர்களுக்குத் தொழிற்பயிற்சி, வீடு, நிலம், குழந்தைகளுக்குக் கல்வி எனப் பலவற்றை அடக்கியதுதான் மறுவாழ்வு. இவை அம்மக்களுக்கு வழங்கப்படுவதில்லை. 45 வயதில் நோய்த் தொற்று ஏற்பட்டு பலர் இறந்துவிடுகின்றனர்.



இரா.அதியமான்

### ? அண்மையில் கேரளாவில் முன்னெடுக் கப்பட்டுள்ள இயந்திரங்கள் மூலம் துப்புரவு செய்யும் திட்டம் பற்றி

நாங்கள் நேரில் சென்று எல்லா விபரங்களையும் சேகரித்து வந்தோம். கேரளாவில் கல்லூரி ஆய்வு மாணவர்கள் தயாரித்திருக்கிறார்கள். ஆனால் அதன் விலை கூடுதலாக இருக்கிறது (16-17 இலட்சம்). நாம் எதிர்பார்ப்பதெல்லாம் தமிழக அரசு ஒரு குழுவை அனுப்பி, கேரள அரசோடு பேசி அத்திட்டத்தைத் தமிழ்நாடு முழுதும் செயல்படுத்த விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது தான். அண்மையில் சென்னையில் இத்தொழிலை ஒழிக்க ஒரு போராட்டம் நடத்தினோம். நவீன இயந்திரங்களைப் பயன்படுத்த வேண்டும் என்று வற்புறுத்தினோம்.

தஞ்சாவூர் பெரியார் மணியம்மையார் கல்லூரியில் கேரளாவைவிட குறைவான விலையில் நவீன இயந்திரங்களை ஆய்வு மாணவர்கள் உருவாக்கி வருவதாகவும் அந்தப் பணி விரைவில் முடிந்து பயன்பாட்டிற்கு வரும் என்றும் ஆசிரியர் கி.வீரமணி அப்போராட்டத்தின் போது தெரிவித்தார். இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே அவர்கள் இச்செயல் திட்டத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். இத்தனை ஆயிரம் பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள் இருந்தென்ன பயன்? பெரியாரின் மாணவர்களே இப்பணியை மேற்கொண்டிருக்கிறார்கள். இத்தொழிலை நவீனப் படுத்தினாலே எல்லோரும் பங்கு பெறும் தொழிலாக மாற்றலாம்.

### ? சமூக நீதித் திட்டங்களுக்கு முன்னோடியாக விளங்கும் தி.மு.க அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றி?

கடந்த காலங்களில் கலைஞர் தூய்மைத் தொழிலாளர் நல வாரியம் அமைத்தார். தளபதி அவர்கள் சென்னை மேயராக இருந்த போது அடைப்பை எடுப்பதற்கு இயந்திரங்களை வரவழைத்தார். ஆனால் பழுது ஏறபட்டு அதைத் தொடர முடியாது போயிற்று. அதற்குப் பிறகு வந்த ஆட்சியில் எந்த முன்னெடுப்பும் இல்லை.

பெரியாருடைய மாணவராக இருந்த காரணத்தால் மட்டும்தான் கலைஞர் அவர்களால் இத்தனை காரியங்களைச் செய்ய முடிந்தது. அருந்ததியர் சமூகத்திற்கு 3% இடஒதுக்கீடு, தூய்மைத் தொழிலாளர்களை மனத்தில் வைத்துத்தான் கொடுக்கப்பட்டது. அன்றைக்கு கலைஞர் முரசொலியில் எழுதிய கடிதமே அதற்குச் சான்று. இத்திட்டத்தை தலை மேல் தூக்கிக் கொண்டு கூத்தாடுவேன் என்று எழுதினார். அவர் இருந்திருந்தால் தூய்மைத் தொழிலாளர்கள் வாழ்க்கைநிலை உயர்ந்திருக்கும். இந்த 7 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் சமூக நீதியில் எந்த முன்னேற்றமும் இல்லாமல் போயிற்று. அடுத்து தளபதி அவர்கள் அந்தப் பணியை சிறப்பாகச் செய்வார் என்கிற நம்பிக்கை எங்களுக்கு நிறையவே இருக்கிறது. மோடி அரசை அப்புறப்படுத்துவோம் என்று தி.மு.க தலைவராகப் பொறுப்பேற்றவுடன் அவர் சொல்லியிருப்பது எல்லோரும் வரவேற்கத்தக்கது

### ? தூய்மைப் பணியாளர்களின் வாழ்க்கை நிலையில் தமிழ்நாட்டிற்கும் மற்ற மாநிலங்களுக்கும் வேறுபாடு இருக்கிறதா?

தமிழ்நாட்டிற்கும் மற்ற மாநிலங்களுக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு இருக்கிறது. 69% இடஒதுக்கீட்டால் தமிழ்நாடு முன்னிலையில் இருக்கிறது. அதனால் தான் அதை ஒழிப்பதற்கு மனுவாதிகள் இப்போது திட்டம் தீட்டியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் 3% இடஒதுக்கீடு என்பது இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் நடைமுறையில் இருக்கிறது. ஆந்திராவில் 4 ஆண்டுகள் நடைமுறையிலிருந்த இத்திட்ட த்தை உயர்நீதிமன்றம் தடை செய்து மேல்முறையீட்டில் உச்சநீதிமன்றமும் தடைசெய்தது. பஞ்சாப், அரியானாவில் 10 ஆண்டுகள் நடைமுறையிலிருந்த உள் ஒதுக்கீடு தடை செய்யப்பட்ட து. தமிழ்நாட்டிலும் உச்ச நீதிமன்றத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்களால் தடை செய்ய முடியவில்லை. காரணம் சட்டரீதியாக நுணுக்கமாக ஆராய்ந்து, தடைசெய்ய முடியாத வகையில் முறைப்படி இதனைச் சட்டமாகக் கலைஞர் நடைமுறைப்படுத்தினார். சமூகநீதியை உள்வாங்கிய தலைவர்கள் இருப்பதால் தான் இங்கு இது சாத்தியம். மற்ற எந்த மாநிலத்திலும் இது போல கிடையாது. ●

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

நிர்வாக ஆசிரியர்கள்
**சிற்பி செல்வராஜ்**
**கி.செந்தில்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**

சுபவீ வலைப்பூ
**www.subavee.com**


மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**


**தொலைபேசி: 044-4204 7162**

## கலைஞருக்குப் புகழ் வணக்கம்



திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தலைமை அலுவலகத்தில் 26.08.2018 அன்று சென்னை மாவட்டச்செயலாளர் திரு. சாந்தசீலன் தலைமையில் கலைஞருக்குப் புகழ் வணக்கம் செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் தலைமைநிலையச் செயலாளர் எட்வின், மாவட்டச் செயற்குழு உறுப்பினர்கள் ஸ்ரீவித்யா, சைதை இளங்கோ, மாநில இளைஞரணித் துணை அமைப்பாளர் கார்த்திக், பேராசிரியர் சரவணகுமார், நன்முகில், ஸ்ரீநாத் ஆகியோர் கலந்துகொண்டனர்.




*தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !*

# கருஞ்சட்டைத் தமிழர்

## தலைகீழானது சாதி

ஓய்ந்தது மழை. வற்றிக் கொண்டிருக்கிறது நீர். இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறது கேரளம்

இது கொஞ்சம் ஆறுதலைத் தருகிறது.

மழையால் வெள்ளம் நிரம்பி மக்கள் வாழ்க்கையோடும், உயிரோடும் போராடிக் கொண்டிருக்கும் நேரத்தில் அவர்களுக்கு உள்ளூர் மக்கள், குறிப்பாக மீனவர்கள் செய்த உதவி அளப்பரியது.

அவர்கள் தங்கள் உயிர்களையும் பொருட்படுத்தாது, தங்கள் படகுக்கு ஏற்படும் சேதத்தைப் பற்றிக்கூடக் கவலைப்படாமல் உதவியிருக்கிறார்கள்.

அதிலும் கூட ஒரு வேதனை.

வெள்ளத்துக்குள்ளும் சாதி புகுந்து விட்ட கொடுமை அங்கே நடந்திருக்கிறது.

வெள்ளத்தின் கொடூரத்தில் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தது ஒரு நம்பூதிரி குடும்பம்.

அதைப் பார்த்த ஒரு மீனவர் அவர்களைக் காப்பாற்றிக் கரை சேர்க்க அந்தக் குடும்பத்தை நெருங்கியிருக்கிறார்.

அந்த நம்பூதிரிக் குடும்பம் தன்னைக் காப்பாற்ற வந்த மீனவரைப் பார்த்தவுடன் பதறிப்போனது.

காரணம் அந்த மீனவர் தாழ்ந்த சாதியாம்.

தொட்டால் தீட்டாம், கை பட்டால் பாவமாம்.

அந்தக் குடும்பம் மீனவருடன் வர மறுத்துவிட்டது. ஆனாலும் அந்த ஏழை மீனவர் அவர்களைக் காப்பாற்றித் தீரவேண்டும் என்ற முடிவில் கெஞ்சியிருக்கிறார்.

நெடுநேரத்திற்குப் பின்னர் அந்த குடும்பம் ஒரு வழியாக இறங்கி வந்து ஒரு நிபந்தனை போட்டிருக்கிறது மீனவரிடம்.

தாங்கள் படகில் வரும்போது தவறியும் கூட மீனவர் தம்மைத் தொட்டுவிடக் கூடாது, உடல் பட்டுவிடக்கூடாது என்பதே அந்த நிபந்தனை.

ஏற்றுக் கொண்ட அந்த மீனவர் அந்தக் குடும்பத்தைக் காப்பாற்றிக் கரை சேர்த்த மகிழ்ச்சியோடு போய்விட்டார்.

இங்கே உயர்ந்த சாதியான நம்பூதிரி தாழ்ந்துவிட்டார்

தாழ்ந்த சாதியாகச் சொன்ன மீனவர் உயர்ந்துவிடடார்.

“ சாதி நீடிக்குமானால் வீசும் காற்றில் ‘விஷம்’ பரவட்டும்“ என்று கவிஞர் பழனிபாரதி சொன்னது நினைவுக்கு வருகிறது.



# நீட்–இறுதித் தீர்வு?

● வெற்றிச்செல்வன்



நமது நாட்டில், மற்ற சமூகங்களை நசுக்கித் தாமே தலைமைப் பதவியில் இருக்க வேண்டும் என்னும் கருத்துடைய பார்ப்பன சமூகத்தின் கையில் கல்வி அகப்பட்டுக் கொண்டிருக்கிறது.

- தந்தை பெரியார் (விடுதலை *17.05.1941*)

ஆதிக்கத் திமிர் கொண்ட மத்திய அரசும், அடிமைத்தனமே அரிச்சுவடியாகக் கொண்ட மாநில அரசும் இணைந்து சமூக நீதியைப் படுகொலை செய்த நாள் இன்று. ஆம்! இன்று சகோதரி அனிதாவின் நினைவு நாள்! (01.09.2017).

காலகாலமாகத் திராவிட இயக்கத்தால் சீரிய முறையில் கட்டமைக்கப்பட்ட தமிழ்நாட்டின் மருத்துவ அமைப்பின் மேல் தொடுக்கப்பட்ட தாக்குதலே நீட் தேர்வு. கல்வியில் தரத்தைக் கொண்டு வருகிறோம் என்ற பெயரினால் அறிமுகப்படுத்தப்பட்ட நீட் தேர்வால் எத்தனை எத்தனை குளறுபடிகள், அலைக்கழிப்புகள், உயிரிழப்புகள் ஏற்பட்டன என்பதைத் தமிழ்நாடே அறியும். அரசுப் பள்ளிகளிலும், கிராமப் புறங்களிலும் பயிலும் மாணவர்களுக்குச் சமவாய்ப்பினை மறுக்கும் காரணத்தாலேயே, 2006 ஆம் ஆண்டு தி.மு.க. அரசால் முனைவர் அனந்தகிருஷ்ணன் குழு அளித்த பரிந்துரையின் அடிப்படையில் நுழைவுத் தேர்வு தமிழகத்தில் ரத்து செய்யப்பட்டது. தரத்தை கொண்டு வருவதல்ல, சமத்துவத்தைத் தகர்க்க வந்ததே நீட் தேர்வு என்பது தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

தனியார் பயிற்சி மையங்களின் பெயரால் கார்ப்பரேட் முதலாளிகளைக் கொழுக்க வைக்கவும், சமூகத்தில் பின்தங்கியவர்களுக்கான சமூகநீதியை மறுக்கவும் ஏற்படுத்தப்பட்ட நீட் தேர்வு ஒழிக்கப்பட வேண்டும். இது இடைக்காலத் தீர்வு மட்டுமே. எனினும், கல்வியை அரசியலமைப்புச் சட்டத்தின் பொதுப்பட்டியலில் இருந்து மாநிலப்பட்டியலுக்கு மாற்றுவதே இதற்கான இறுதியான தீர்வாகும்.

மாநிலங்களின் சுயாட்சி என்பதற்கான பொருள் என்னவென்றால், கல்வி, சுகாதாரம் முதலிய சேவைகளை ஒவ்வொரு மாநிலமும் தனது பொறுப்பில் எடுத்துக் கொண்டு தனது குடிகளுக்கு வழங்குவதாகும் என்கிறார் அம்பேத்கர். (டாக்டர் அம்பேத்கர் பேச்சும் எழுத்தும், தொகுதி 1, ப. 340).

அறிஞர் அண்ணாவின் "மாநில சுயாட்சி" முழக்கம், தி. மு. கழகத்தால் முன்னெடுக்கப்பட்டு இந்திய மாநிலங்கள் அனைத்திற்கும் கொண்டு செல்லப்பட வேண்டும். மாநில உரிமைகள் தொடர்ந்து நடுவண் அரசால் பறிக்கப்படுவதைத் தடுக்க மாநில அரசுகள் ஒன்றிணைந்து குரல் எழுப்ப வேண்டும். அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும். அப்போது தான் உண்மையான கூட்டாட்சி முறை இந்தியாவில் ஏற்படுத்தப்படும். ●

## வாசகர் குரல்



மூளையெங்கும் மூடத்தனம் அருமையான கருத்து....இளைய தலைமுறைகளை அவசியம் சென்றடைய வேண்டும்.

ஆனந்த்,
கிட்டசூராம்பாளையம்.



இவ்வார கருஞ்சட்டையைப் படித்தேன். நூல் அறிமுகம் - ஆதிக்க சாதிகளுக்கு மட்டுமே அவர் பெரியாரா? தோழர். வெற்றிச்செல்வன் அவர்களின் விளக்கவுரை அருமை தொடர்ந்து இது போன்ற கருத்துக்களைப் பகிரவும்.

பழனி, கொல்கத்தா.



கருஞ்சட்டையை வாசித்தேன். திமுக விற்கு எதிரி யார் என்றால். சமுக நீதிக்கு .யாரெல்லாம் எதிரிகளோ அவர்கள் எல்லாம் திமுக விற்கு எதிரிகள் என்று கூறியிருப்பது மிக அருமை.

சுல்தான், சவுதி அரேபியா



பூவுலகின் நண்பர்கள் சுந்தர்ராஜன் அவர்களின் நேர்காணல் முக்கியமானதாகப்பட்டது. ஆனால், ஒரு நாட்டின் வளர்ச்சியில் தன் அன்றாட வாழ்வு, பொருளாதார வளர்ச்சியினைக் காணும் இளம் தலைமுறையினரிடம் இம்மாதிரியான சூழலியல் சார்ந்த விஷயங்களின் நீண்ட கால விளைவுகளை விளக்கும் அளவு பதில்கள் இல்லை என்பதோடு கேள்விகளும் கேட்கப்படுவதில்லை என்று தோன்றுகிறது. அவர்களுக்கான வாழ்வாதாரம் சார்ந்த பயங்களுக்கு ஆறுதல் மற்றும் ஓரளவு தெளிவான பதில்கள் இல்லாமல் ஆதரவினை மாத்திரம் கோருவது சற்று வருத்தம் அளிக்கிறது.

ஜெயன் நாதன் கருணாநிதி. சென்னை.

புதிய பகுதி



# வினாவும் விடையும்

## மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைவர் கலைஞர் இடத்தைப் பூர்த்தி செய்வாரா?

**வினா:** சிலம்பரசன், காஞ்சிபுரம்

**விடை:** பேராசிரியர். சுப.வீ

ஒப்பிட்டுப் பார்த்தல் என்பது நம்மிடையே இயல்பாக உள்ள ஒரு குணம். யாரும் யார் இடத்தையும் நிறைவு செய்ய வேண்டியதில்லை என்று கருதுபவன் நான். அறிஞர் அண்ணா இறந்தவுடனும் இப்படி ஒரு வினா பரவலாக எழுந்தது.


தலைவராகப் பொறுப்பேற்றவுடன் திரு ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை குறிப்பிடத்தக்கது. தொடக்கத்திலேயே அவர் ஒன்றைக் குறிப்பிடுகின்றார். "நான் கலைஞர் இல்லை. அவரைப் போல் என்னால் பேசவோ, எழுதவோ முடியாது" என்று மிக நேர்மையாக ஒரு செய்தியை அவர் பதிவு செய்துள்ளார். கலைஞரைப் போல் அவர் பேசவும், எழுதவும் வேண்டியதும் இல்லை. ஒவ்வொருவருக்கும் ஓர் இயல்பு, குணம், திறமை உண்டு.

கட்சியை நடத்திச் செல்வதில் ஸ்டாலின் எப்படி இருக்கப் போகிறார் என்பதுதான் நம்முன் உள்ள கேள்வி. அதனை அவர் திறம்படச் செய்வார் என்பதற்கான பல சான்றுகள் உள்ளன. கட்சியில் படிப்படியாக வளர்ந்தவர் அவர். கலைஞரால் பயிற்றுவிக்கப்பட்டு உருவாக்கப்பட்டவர். பயிற்சி, துணிவு, உழைப்பு ஆகிய மூன்றும் அவரிடம் உள்ளன. எனவே கலைஞரின் இடத்தை கட்சியில் அவர் நிரப்புவார் என்பதோடு, காலப்போக்கில், கலைஞரைத் தாண்டியும் கட்சியை உயர்த்துவார் என்று நம்பலாம்.

'கலைஞரைத் தாண்டி' என்று எப்படிச் சொல்லலாம் என யாரும் வருந்த வேண்டியதில்லை. கலைஞரைத் தாண்டுவதுதான் கலைஞருக்கும் பெருமை!

# கிரேக்கமும் தமிழகமும்

● எழில்.இளங்கோவன்



பண்டைய கிரேக்கத்தில் நாடோடிப் பாடகர்கள் இருந்துள்ளார்கள். இவர்கள் நான்கு நரம்புகள் கொண்ட இசைக்கருவிகளை மீட்டிப் பாடுவார்கள் என்பதை `இலியத்'காவியம் சொல்கிறது. ஆகவே இவர்களைப் பாணர்கள் என்றும் கவிஞர்கள் என்றும் சொல்லலாம்.

கிரேக்கத்தின் கலைகள், விளையாட்டு, வீரம், போர்கள், டிராய், ஏதன்ஸ், ஸ்பார்டா போன்றவைகளை வரலாற்றுப் பார்வையுடன் இவர்கள் பாடுவார்கள். இவர்கள் நூற்றுக்கணக்கானவர்களாக இருந்துள்ளார்கள்.

கிரீஸின் கிழக்குக் கடல் பகுதியில் உள்ள கியாஸ் என்ற தீவில் பிறந்த ஹோமர் என்பவர், மேற்சொன்ன கவிஞர்களின் கவிதைகளால் ஈர்க்கப்பட்டார். அக்கவிதைகளைத் தொகுக்கவும் தொடங்கினார்.

அவர் கவிதைகளைத் தொகுக்கும் போது கவிதைகள் இருந்தன. பாடியவர்களின் பெயர்கள் கிடைக்கவில்லை. ஆகவே அக்கவிதைகளை ஒன்றுக்கு ஒன்று தொடர்படுத்தி நெடுங்கவிதையாக ஆக்கினார்.

அதில் ஸ்பார்ட்டா நாட்டின் மன்னன் மெனலேயஸின் மனைவி ஹெலன். அவளை டிராய் அரசின் இளவரசன் பேரீஸ் கடத்திக் கொண்டு போய்விடுகிறான்.

இதனால் டிராய் அரசுக்கும், ஸ்பார்டா அரசுக்கும் இடையே நெடிய போர் நடக்கிறது. இறுதியில் டிராய் அரசு வீழ்ச்சி அடைகிறது. டிராய் வீரர்கள் டிரோஜன் என்று அழைக்கப் பட்டதால் இது டிரோஜன் போர் என்று அழைக்கப்பட்டது. ரோமானியர்களால் கட்டப்பட்ட டிராய்நகரம் 9 தடவைகள் தோற்கடிக்கப்பட்டுள்ளது. இதில் ஹெலனுக்காக நடைபெற்ற டிரோஜன் போர் கி.மு. 12ஆம் நூற்றாண்டில் நடந்த 6வது போர்.

டிராய் நகரத்திற்கு `இலியம்' என்ற ஒரு பெயர் இருப்பதால் இந்தக் கவிதைத் தொகுதிக்கு இலியத் என்று பெயர் கொடுத்தார் ஹோமர். இது 24 தொகுதிகளைக் கொண்ட கிரேக்கத்தின் முதல் இதிகாசம்.

அடுத்து, மேற்சொன்ன டிரோஜன் போரில் பெரிதும் வீரம்காட்டிய கிரேக்க மன்னர்களுள் ஒருவன் ஒடிஸ்ஸஸ். போர் முடிந்து தன் சொந்த ஊராகிய இத்தாக்காவுக்கு அவன் திரும்பிவரும் வழியில் நிகழ்கின்ற சம்பவங்கள், அவன் ஊரில் இல்லாத போது அவனின் மனைவிக்குத் தொல்லை கொடுத்தவர்களை அழிப்பது வரை உருவாக்கிய இலியத்தின் தொடர்ச்சியை `ஒடிஸ்ஸி' என்று பெயரிட்டான் ஹோமர். இதுவும் 24 தொகுதிகளைக் கொண்டதுதான்.

பண்டைய தமிழகத்தில் புலவர்கள் என்று அழைக்கப்பட்ட பாவலர் பெருமக்கள் ஏராளமானவர்கள் வாழ்ந்துள்ளார்கள். நிலையாக ஓரிடத்தில் இவர்கள் தங்குவதில்லை. மக்கள் மத்தியிலும், மன்னர் முன்னிலையிலும் பாக்களைப் பாடித் திரிந்து கொண்டிருந்தார்கள் இவர்கள்.

இந்தப் புலவர்களின் பாடல்களைத் தொகுக்க விரும்பிய பாண்டியர்கள் தமிழ்ச்சங்கத்தை உருவாக்கித் தொகுத்தார்கள்.

தொகுக்கப்பட்ட பாடல்கள் அகம் சார்ந்ததாகவும், புறம் சார்ந்ததாகவும் இருந்தன. அவைகளில் திணைகள், துறைகள் காணப்பட்டன. அப்படி அகம்சார்ந்து தொகுக்கப்பட்டவைகள் நெடுந்தொகை, நற்றினை, குறுந்தொகை, ஐங்குறுநூறு என்றும், புறம் சார்ந்ததாகப் புறநானூறு என்றும் வகைப்படுத்தப்பட்டன. இவைகள் ஆசிரியப்பாவால் பாடப்பெற்றவை. பரிபாடல், பதிற்றுப்பத்து, கலித்தொகை இவைகளில் பாவினம் வேறு பட்டவை. இவை எட்டுத்தொகை ஆகும்.

பாட்டுடைத்தலைவனை வைத்துப் பாடப்பட்ட பத்து நூல்களின் தொகுப்பு பத்துப்பாட்டு.

பதினெட்டு அறநெறி நூல்களின் தொகுப்பு பதினென் கீழ்க்கணக்கு இங்கே பாடிய பெரும்பாலான புலவர்களின் பெயர்களும் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. முடத்திருமானார் தொடங்கிய கடைச்சங்கம், கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதியோடு முடிவடைகிறது. இந்தச் சங்கத்தின் காலம், சங்க இலக்கியங்களின் பொற்காலம் எனக் கூறலாம்.

செறிவார்ந்த பண்டைய கிரேக்க இலக்கியங்களும், வளம் நிறம்பிய பண்டைய தமிழ் இலக்கியங்களும்தான் உலக இலக்கியங்களுக்கு முன்னோடி என்றால் மறுப்பவர் உளரோ, மகிழ்வதை விடுத்து! ●

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.